முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஏற்கெனவே சென்னையின் மையப் பகுதியிலே இருக்கின்ற பேருந்து நிலையங்களை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 15 கோடி ரூபாயை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கித் தந்து, ஒவ்வொரு பேருந்து நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. தியாகராய நகர் பகுதியிலே இருக்கின்ற அந்தப் பணிமனையும், பேருந்து நிலையமும், அடுக்குமாடியாகக் கட்ட வேண்டும். கீழ்த் தளம் பேருந்துகள் செல்வதற்கும், மேல் தளத்திலே கார்ப்பரேஷன் வாடகை வசூல் செய்வதைப்போல ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு, உரிய முறையிலே நபார்டு மூலமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பணிக்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

குடமுழுக்கு

***106610—திரு. கே.எஸ். விஜயகுமார்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி வட்டம், சித்தராஜ கண்டிகையிலுள்ள பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 ஏப்ரல் 5]

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், சித்தராஜ கண்டிகையில் உள்ள அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுடைய நிர்வாகம் பரம்பரை அறங்காவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. திருப்பணிகள் பரம்பரை அறங்காவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட பணிகள் முடிவுற்றுள்ளன. விரைவில் எஞ்சிய பணிகளையும் முடித்து குடமுழுக்கு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறிய திருப்பணி இதுவரையில் எந்த நிலையிலும் துவக்கப்படாத நிலையே உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 23-7-2009-லே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தத் திருப்பணி துவக்கப்பட்டது 14-1-2009-லே. ஆக, திருப்பணி துவங்கிய பிறகுதான் அந்த வினாவை எழுப்பியிருக்கிறார். தற்போது அனைத்துப் பணிகளும், ஏறத்தாழ அங்கே இருக்கக்கூடிய பெருமாள் சன்னதி, பத்மாவதி தாயார் சன்னதி, ஆண்டாள் சன்னதி, கோதண்டராமர் சன்னதி ஆகியவற்றின் கருவறைகளும், விமானப் பணிகளும் முடிவுற்று, வர்ண வேலைகள்தான் பாக்கி இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்தப் பணி அங்கே 90 சதவிகிதம் வரை தற்பொழுது நடந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் அந்த பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்யும் ஒரு நிலையில்

[2010 ஏப்ரல் 5

இன்றையவரை, இன்றைக்குக் காலையில்கூட அந்தக் கோயிலுக்கு உண்டான தகவலை அந்தக் கிராம மக்களிடத்திலிருந்து பெற்றிருந்தேன். நேரடியாக அந்தக் கிராமத்திற்குச் சென்றுகூட அந்தக் கிராம மக்களிடமிருந்து பெற்றிருக்கிறேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறொரு திருக்கோயிலின் திருப்பணியை இங்கே கூறுவதாக எண்ணுகிறேன். ஏனென்றால், கும்மிடிப்பூண்டி வட்டம், சித்தராஜ கண்டிகையில் உள்ள பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் 500 வருடங்களுக்கு முன்னர் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில் மற்றும் திருத்தெப்பம் 2005-ல் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் அப்போதைய அறநிலையத் துறை ஆணையர் திரு. பிச்சாண்டி அவர்கள் அந்தத் திருக்கோயிலை நேரடியாகப் பார்வையிட்டு, பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கும் செய்வதற்காக அறநிலையத் துறை சார்பில் 25 இலட்சம் ரூபாய் ஒதுக்குவதாகக் கூறி, மக்களின் பங்களிப்பாக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று அங்கே கூறினார்கள். உடனடியாக அந்தப் பகுதி மக்கள் 25 இலட்சம் ரூபாய் ஒதுக்குவதற்குத் தயாராக இருந்த நிலையில், அதன் பிறகு ஆட்சி மாற்றத்திற்குப் பின் நான்கு ஆண்டுகாலம் எந்தவொரு பணியும் துவக்கப்படவில்லை. ஆனால், அந்தக் காலக்கட்டத்தில், 11 பேர் கொண்ட குழுவை அமைக்க வேண்டுமென்று அறநிலையத் துறை ஆணையர் கூறியதற்கிணங்க அந்த 11 பேர் கொண்ட குழு இன்று வரை செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆனால், இந்த நான்காண்டுகளாக எந்தவொரு பணியும் செய்யப்படவில்லை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பண்பாக்கத்திலுள்ள ஈஸ்வரன் கோயில் திருப்பணியை இங்கே எடுத்துரைப்பதாக நான் எண்ணுகிறேன்.

முற்பகல் 10-20

இன்றைக்கு ஆவடியில் இயங்கிக்கொண்டிருக்கின்ற இராணுவ அலுவலகம், முன்பு கும்மிடிப்பூண்டி தொகுதியில் இயங்கிக்கொண்டிருந்த வேளையில், அந்த பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலை அவர்கள் பயன்படுத்தியதாக வரலாறுகளெல்லாம் கூறிக்கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சிறப்பான அந்தக் கோயிலை இன்றுள்ள ஆணையர் அவர்கள்— நானேகூட நேரில் அழைத்துச் சென்று அந்தத் திருப்பணிகள், இதுவரையிலும் எந்த வேலையும் தொடங்கவில்லை என்பதை

TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 5]

மீண்டும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை நிரூபிக்கவும் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திருப்பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் திருக்கோயிலுக்கான பதிலைத்தான் நான் இங்கே தந்திருக்கின்றேன். 1564 ஆம் ஆண்டில் விஜயநகரப் பேரரசால் இந்தத் திருக்கோயில் பணிகள் தொடங்கப்பட்டு, 500 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கின்ற இந்தத் திருக்கோயிலில் ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்னர் 1939 ஆம் ஆண்டு இறுதியர்கக் குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கிறது. ஆக, 79 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது திருப்பணி நடைபெற்று வருகிறது என்ற விவரங்களை, உறுப்பினர் அவர்கள் காலையிலே சென்று பார்த்தேன் என்கிறார். நானும் இங்கே இருக்கைக்கு வந்து அமர்ந்த பிறகுகூட பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையிலே இந்தப் பதிலைத் தருகிறேன். ஆகவே, 75 சதவீதத்திற்கு மேற்பட்ட திருப்பணிகள் முடிந்திருக்கின்றன. இந்தத் திருக்கோயில் குடமுழுக்கிற்கு உறுப்பினர் அவர்களை நான் வெகு விரைவிலே அழைத்துச் செல்கிறேன்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Third supplementary எல்லாம் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) பார்க்கச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பணி நடக்கவில்லை என்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் பணி நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். பார்க்கச் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) விவாதம் கூடாது. (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே விவாதம் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) பிறகு பார்த்துக்கொள்வோம். (குறுக்கீடுகள்) சரி, அப்புறம் பேசுவோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இல்லாத விவரங்களைத் தந்துகொண்டிருக்கிறார். 25 இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டதென்று சொல்கிறார். ஆனால், அந்தத் திருக்கோயிலுடைய பரம்பரை அறங்காவலர் திரு. ரோஸ்பிள்ளை அவர்கள் மூலமாக 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 11 இலட்சம் ரூபாய் வரையிலே தற்பொழுது பணிகள் முடிந்திருக்கின்றன. ஆகவே, துறையின் சார்பிலே நிதி ஒதுக்குவதாக எந்த உறுதிமொழியும் தரப்படவில்லை. அந்தத் திருப்பணிக்கான நிதியை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். திரு. எல். ரவிச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகர் மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய காலியிடத்தில் இன்றையதினம் ரூபாய் ஒரு கோடி செலவிலே ஒரு வணிக வளாகம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, இப்போது அந்தப் பணி முடக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பணியை வெகு விரைவில் நடத்தி முடிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனி வினா எழுப்பவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு.ப. டில்லி பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

7—

தரம் உயர்த்துதல்

***92113—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்